[20th August 1960

போது நேரில் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து, இதை மைனர் இரிகேஷன் ஸ்கீமோடு சேர்த்து நல்ல முறையில் வடிகால்களை எல்லாம் ரிப்பேர் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

Houses for the residents of Javadhu Hills

* 349 *Q.*—Sri S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் போளூர் தாலுகா ஜவ்வாது மலைவாசிகளுக்கு எத்தனை வீடுகள் கட்டித்தரப்படும்?

(ஆ) 1958, 1959 ஆண்டுகளில் எத்தனை வீடுகள் கட்டித் தரப்பட்டன?

(இ) இல்லையாயின் காரணமென்ன?

The Hon. Sri P. KAKKAN : (அ) The programme has not yet been finalised.

(ஆ) and (இ) No house was constructed for the hill tribes in the Javadhu Hills of Polur taluk during 1958–59 in view of the limited funds allotted for the scheme.

Sri S. M. ANNAMALAI : ஸார், மலைவாசிகளுக்காக பணங்கள் ஒதுக்கப்பட்டும் செங்கம் தாலுகாவுக்கும் திருப்பத்தூர் தாலுகாவுக்கும் இந்த வசதி செய்யப்படுகிறதே தவிர போளூர் தாலுகாவைப்பற்றி கவனிப்பதே இல்லை. இம்மாதிரி காரியங்களில் சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து ஆலோசிப்பதே கிடையாது. ஒதுக்கப்படுகின்ற பணங்கள் எல்லாம் எல்லா தாலுகாக்களுக்கும் சரிசமமாகக் கொடுப்பதற்குரிய வகையில் சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா?

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்கனவே இந்த சபையில் சொல்லியிருக்கிறார்கள். போளூர் தாலுகாவில் போதிய வீடுகள் கட்டப்படவில்லை என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து அங்கே வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக எம்.எல்.ஏ.-க்கள், எம்.எல்.ஸி-க்கள் இவர்களை எல்லாம் கலந்துதான் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்களும் அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்து தொடர்பு வைத்துக்கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொண்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

Parambikulam and Cauvery river waters

* 350 *Q.*—Sri S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம், காவிரி ஆறுகளின் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வது பற்றி ஏப்ரல் மாதம் நடந்த தென் மண்டலக் கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதா?